பக்கங்கள் 6 விலை சதம் 40

RECEIVED
PERIODICALS DIVISION
UNIVERSITY LIBRARY

ஈழநாடு
THE EELANAADU

மலர் 19 தை 15 ஸபர் 18 இதழ் 349
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 28-1-78

சன் சயின் சோப்
பாவனையாளர்கள்
மிகவும் விரும்பி பாவிப்பது
சன் சயின் சோப்
இலங்கையில் எந்தக்
கடையிலும் சன் சயின் சோப்
என்று கேட்டு வாங்கி
அதன் தரத்தை
அறிந்து கொள்ளுங்கள்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## மாலைகளுடன் சென்றவர்கள் ஏமாற்றம்

[திருநெல்வேலி]

கல்வி அமைச்சர் திரு. நிசங்கவிஜயரத்தினவை வரவேற்க பலாலி விமான நிலையத்திற்கு நேற்றுக் காலை மாலைகளுடன் சென்ற அதிபர்களும், ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஏமாற்றமடைந்தனர்.

கல்விஅமைச்சர் விமானத்திலேயே வருவார் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது

[6ம் பக்கம் பார்க்க]

# பொத்துவில் கனகருக்கு துப்பாக்கிச் சூடு!

(கொழும்பு)

பொத்துவில் எம். பி. திரு. எம். சி.கனகரத்தினம் துப்பாக்கியால் சுடப்பட்டு பலத்தகாயங்களுடன் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள திரு. கனகரத்தினம் ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டாரென்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தின் அருகே நின்ற 3 இளைஞர்கள் அவரைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு மறைந்துவிட்டனராம்.

கடந்த இரவு 7-30 மணியளவில் திரு. கனகரத்தினம் தமது வீட்டிலிருந்து அருகிலுள்ள தமது காரியாலயத்திற்குச் செல்வதற்காக வெளியேறியபோது அங்கு நின்ற காற்சட்டையணிந்த மூன்று இளைஞர்களும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

### 5 தடவை சூடு

ஐந்து தடவைகள் துப்பாக்கியால் சுடப்பட்டதாகவும், திரு. கனகரத்தினத்திற்கு நெஞ்சிலும், வலது காதிலும், முதுகிலுமாக மூன்று சூடுகள் மட்டுமே பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்து உடனடியாகக் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுச்

(6-ம் பக்கம் பார்க்க)

# மாணவர்களுக்கு அமைச்சர் உரை

[திருநெல்வேலி]

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில், மாணவர்களுக்கு மட்டும் இன்று மாலை நடைபெறும் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் வருடாந்தக் கலைவிழாவில், கல்வியமைச்சர் திரு நிசங்கா விஜயரத்ன பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்.

திரு. சி பொ சிவபாதசுந்தரம் தலைவராகவும், திரு செ. சிவப்பிரகாசத்தைச் செயலாளராகவும் கொண்ட கலைவிழாக்குழு, இக்கலைவிழாவை ஏற்பாடு செய்துள்ளது. இக் கலைவிழா நேற்றுப் பொதுமக்களுக்காக நடாத்தப்பட்டது.

இவ்விழா அளவை சங்கீத இளைஞர் பேரவையின் மங்கள வாத்தியத்துடன் ஆரம்பமாகும்.

இவ்விழாவில், யாழ் இந்து மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம், யாழ். சிங்கள மகாவித்தியாலயம், யாழ், மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, கோப்பாய் றஜினர் மகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் பங்குபற்றும்.

கல்வியமைச்சர் திரு நிசங்க விஜயரத்ன, கல்விப் பணிப்பாளர் திரு. தி மாணிக்கவாசகர் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். [க]

## காந்திஜியின் உருவப்படம்

காந்தி மகானின் சிரார்த்த தினமான 30-1-78 திங்கட்கிழமை 'ஈழநாடு' பத்திரிகையுடன் 'மில்க்வைற்' அன்பளிப்பாக காந்திஜியின் உருவப்படம் இலவசமாக வழங்கப்படும்.

# யாழ். நகரில் கல்வி அமைச்சர்

[யாழ்ப்பாணம்]

''இந்த நாட்டிற்கு நல்வழி காட்டுகின்ற கலங்கரை விளக்குகளாக கல்வி நிலையங்கள் விளங்கவேண்டும். இக் கல்விநிலையங்களின் வழிகாட்டல்மூலம் எதிர்காலத்தில் ஒளிமிகுந்த நாடாக இலங்கை திகழத்தக்க சிறந்த மாணவர்கள் உருவாகவேண்டும்.''

யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் கல்வி அமைச்சர் திரு நிசங்காவிஜயரத்தின மேற்கண்டவாறு கூறினார்.

கல்வி அமைச்சர் நேற்றுக் காலை விசேட ரயிலில் சரியாக 8-05 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்தை வந்தடைந்தார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு டபிள்யு. ஏ எல். விஜயபாலா முதலில் மாலைசூட்டி வரவேற்றார். இவரைத் தொடர்ந்து யாழ். புகையிரத நிலைய அதிபர் திரு ஜோன் தம்பிராசா, கல்விப் பணிப்பாளர் திரு ரி. மாணிக்கவாசகர், யாழ். பிரதேச ஐக்கிய தேசியக் கட்சி செயலாளரும் ஊர்காவற்றுறை ஐ. தே கட்சி அமைப்பாளருமான திரு. ம. அமிர்தலிங்கம், சாவகச்சேரி தொகுதி ஐ. தே. க. அமைப்பாளர் திரு, ஏ. தில்லைநாதன், காங்கேசன்துறைத் தொகுதி ஐ. தே க. அமைப்பாளர் திரு. சிவராசா, இக்பால் நினைவுக் குழு சார்பில் அல்ஹாஜ் எம். ஐ. எம். மீரான் முகைதீன் ஆலிம். அகில இலங்கை தமிழ் பௌத்த காங்கிரஸ் தலைவர் எம் வைரமுத்து ஆகியோர் மாலைசூட்டி வரவேற்றார்கள். வடபகுதி ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களும் அணிவகுத்து நின்று மாலைசூட்டினர்கள்.

கல்வி அதிகாரி திரு. எஸ். சிவப்பிரகாசம். அலுவலக உதவியாளர் திரு. ஏ. நடராசா ஆகியோர் அமைச்சரின் வடபகுதி விஜய ஏற்பாடுகளை உடனுக்குடன் செய்தவண்ணமிருந்தனர்.

யாழ். புகையிரதநிலையத்திலிருந்து நேராக, அமைச்சர் யாழ். சிங்கள மகாவித்தியாலயத்திற்குச் சென்றபோது அங்கு வரவேற்பளிக்கப்பட்டது.

அங்கு அமைச்சர் பேசுகையில் கூறியதாவது:

''இப்பாடசாலையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் பிள்ளைகள் ஒன்ருக இருந்து, ஒற்றுமையாகக் கல்வி கற்பதைக் காண, நான் மகிழ்ச்சியடைகிறேன் இதே ஒற்றுமை, இந்நாட்டிலும் நிலவவேண்டும் என விரும்புகிறேன். அத்தகைய ஒற்றுமைக்கு, மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம் அவசியமானது.

'ஆசிரியர்கள், மாணவர்களுக்கு ஒழுக்கம் கற்பிப்பதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். ஒழுக்கம் இல்லாவிடில் நாட்டில் பயங்கரவாதம் போன்ற சம்பவங்கள் ஏற்படும்.''

இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. தர்மசேனவும் உரையாற்றினர்.

கல்வியமைச்சர், யாழ் நாக

[6-ம்பக்கம் பார்க்க]

# ஆஸ்பத்திரி நோயாளருக்கு இருவேளை சோறு

## பெப்ரவரி 4-ம் திகதி முதல் ஆரம்பம்

(கொழும்பு)

ஆஸ்பத்திரிகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு பெப்ரவரி 4ம் திகதியிலிருந்து இரண்டுவேளை சோறுவழங்கப்படும்

சுகாதார அமைச்சர் இந்த ஏற்பாட்டை செய்திருக்கிறார்.

ஒரு வாரத்துக்குமேல் ஆஸ்பத்திரிகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகள் தமது அரிசி பங்கீட்டுப் புத்தகத்தை ஒப்படைக்க வேண்டும் என்ற விதி ரத்துச் செய்யப்படுகின்றது.

ஆஸ்பத்திரிகளில் உணவு வழங்குவது போன்ற சேவைகளுக்காக அரசாங்கம் 8 கோடி ருபாய்க்கு மேல் செலவிடுகின்றது. புதிய ஏற்பாடுகளின்படி மேலும்பெருந்தொகைப்பணம் செலவிட வேண்டி ஏற்படலாம்.

## மூடப்படும்!

கொழும்பு

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதியாகத் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பதவிஏற்கும் வைபவத்தையொட்டி அடுத்த மாதம் 4, 5-ம் திகதிகளில் சகல தவறணைகளும் மதுபானக்கடைகளும் மூடப்பட வேண்டும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. [இ]

## வருந்துகிறோம்

மன்சாரம் தடைப்பட்டதின் காரணமாக நேற்று 'ஈழநாடு' வெளியாவதில் தாமதம் ஏற்பட்டதென்பதை வாசகர்களதும், விளம்பரதாரர்களதும் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றோம். எதிர்பாராத இத்தடங்கலினால் ஏற்பட்ட சிரமங்களுக்காக வருந்துகிறோம்.

--நிர்வாகி.

## வேலைநிறுத்தம் செய்வர்?

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாநகரசபைத் தொழிலாளர்கள் இம்மாதம் 31ம் திகதியிலிருந்து வேலைநிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ளனர்.

மாநகரசபையின் மின்சாரப் பகுதி, சுகாதாரப்பகுதி, மராமத்துப்பகுதி, தண்ணீர்ப் பகுதி ஆகிய பகுதிகளில் பணிபுரியும் தொழிலாளர்களே வேலைநிறுத்தத்தில் குதிக்க உள்ளனர்.

21 கோரிக்கைகளை முன்வைத்தே இவ்வேலைநிறுத்தம் நடைபெற உள்ளது. (இ)

## திருமண அழைப்பு

மணமகன்
திருவளர் செல்வன் செல்வரத்தினம்
[பாடநூல் ஆசிரியர்]

மணமகள்
திருவளர் செல்வி கௌரி

இடம்: அப்புக்காத்து வளவு
அராலி மேற்கு, வட்டுக்கோட்டை,

முகூர்த்தம்: 29-1-78 ஞாயிறு நண்பகல்
12-56 முதல் 2-47 வரை.

வரவேற்பு: மணமகள் இல்லம்

உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

வி. தங்கதேவி
அப்புக்காத்து வளவு,
அராலி மேற்கு.
வட்டுக்கோட்டை.

த விசுவலிங்கமும்
பாரியாரும்
'அன்னகிரி',
அளவெட்டி. 8350

## விளம்பரம்

### பயிற்சி

3 மாத விசேட A. M. I. M. I. (London) பரீட்சைக்கு சமனான மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 10-02-1978-ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு, அதிபர் இன்ஸ்ரிரியூட் ஒப் எஞ்ஜினியரிங் ரெக்னேலொஜி, 11/B ஸ்ரான்லிறேட், யாழ்ப்பாணம். 8307

இரத்தினக்கல்லியல் விஞ்ஞான ரீதியில் இனங்காணுதல், விலைமதிப்பீடுதல், வியாபாரம், பட்டைதீட்டல் என்பன பட்டதாரிகளால் கொடுக்கப்படுகின்றன தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாணக் கல்விநிலையம் (சாந்தி இனிமாவுக்கு முன்பாக) 8341

### தேவை

தையல் தைப்பதில் அனுபவமும் தேர்ச்சியும் உள்ள பெண்கள்உடன் தேவைநேரில் தொடர்பு கொள்ளவும். கிளியோ(F)பான் இண்டஸ்டிறிஸ் 119/1/1 K. K. S. றேட். யாழ்ப்பாணம் (மைலன்ஸ் மாடி) 8323

பா ஓடுவதில் நன்கு அனுபவமுள்ள நெசவு ஆசிரியை அல்லது பா ஓடுவதில் 5 வருட அனுபவமுள்ள பெண் நெசவாளர் தேவை. நேரில் வரவும். இல 4 மவுண்காமல் வீதி, யாழப்பாணம். 8345

ஹோட்டலில் சகல வேலைகளுக்கும் ஆள்தேவை. நேரில் வரவும். சந்திரகுமார், 68/5 இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். 8344

### நன்றிநவிலல்

இம்மாதம் 23-ம் திகதி நடந்தேறிய எங்கள் திருமணத்தின் போதும், 24-ம் திகதி நடைபெற்ற வரவேற்புஉபசாரணையின் போதும் கலந்துகொண்டு சிறப்பித்த நண்பர்கள், உறவினர்கள், பெரியோர்கள் அனைவருக்கும் எங்களது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். வாமதேவன் தம்பதிகள். கொண்டாவில் மேற்கு. 8340

**சன்சயின்**
**அரைபார்சோப்**
இன்றே
கேட்டுவாங்குங்கள்
லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி.

### கல்வி

பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள் சென்று இலக்கணம் இலக்கியம் (Literature) புத்தக சேவை (Library Service) ஆங்கிலப்பேச்சு (Spoken English) பொதுஅறிவு கற்றுக் கொடுப்பார்கள். மத்திய ஸ்தலத்திற்கு வருபவர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்படும். விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8258 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8258

பிராஜ்மல் லேர்ணரி, தெல்லிப்பளை (கூட்டுறவு வைத்தியசாலைக்கு அண்மையில்) ஆங்கிலம், தட்டெழுத்து, விஞ்ஞானம், பாலர் வகுப்புகள் மாசி 1-ம் திகதி ஆரம்பமாகும். சுருக்கெழுத்து ஆசிரியருக்கு வெற்றிடமுண்டு. 8335

### விற்பனைக்கு

புடவைக்கடை சாய்ப்பு கடைகளுக்கு தேவையான கண்ணடி அலுமாரிகள் விற்பனைக்குண்டு. 55 பெரிய கடை யாழ்ப்பாணம். 8342

பலாலிவீதியில் திருநெல்வேலி விவசாய பாடசாலைக்கு அருகாமையில் 3½பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: 682, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம். 8333

## இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புகள் பயிற்சி நிலையம்

**வகுப்புகள்:-** G A.Q., G.S.Q., First in Commerce B. A., B. com.

**நடைபெறும் இடங்கள்:-** யாழ்ப்பாணம், கொழும்பு,மட்டுநகர்.

**தகைமைகள்:** (I) G. C. E. A/L நான்கு பாடங்கள் சித்தியடைந்திருந்தல்வேண்டும்.
(II) 25 வயதிற்கு மேற்பட்டோர் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 2-2-78**

**புதிய வகுப்புகளுக்கான விரிவுரைகள் ஆரம்பம் 4-2-78.**

புதிதாக பதிய விரும்பும் மாணவர்கள் பாடங்கள் பற்றிய விபரத்தையும் பதிவு அனுமதிப் பத்திரத்தையும் முத்திரையிட்ட சுயமுகவரி கொண்ட 9'' X 4'' தபால் உறை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

விளம்பர இல 1000,
C/o, ஈழநாடு லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.

# அமெரிக்க சமுத்திரவியல் விஞ்ஞானிகள் வருகின்றனர்

(கொழும்பு)

கொழும்பில் உரை நிகழ்த்துவதற்கு இரு அமெரிக்க சமுத்திரவியல் விஞ்ஞானிகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் இலங்கை வரவுள்ளனர்.

பேராசிரியர் டொன் வால்ஷ், பேராசிரியர் டொனுல்ட் எல். கீச் ஆகிய இந்த இருவரும்சமுத்திரவியல், கடல்வள அபிவிருத்தி ஆகிய துறைகளில் நிபுணர்கள் ஆவர்.

பேராசிரியர் வால்ஷ், தென் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் சமுத்திரப் பொறியியல்துறைப் பேராசிரியராகப் பணி புரிகிறார். கடல் மற்றும் கடலோர ஆய்வு நிலையத்தின் அதிபராகவும் இருக்கிறார்.

பேராசிரியர் கீச் அதே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கடல் உதவித் திட்டத்தின் அதிபர். கடல் மற்றும் கடலோர ஆய்வு நிலையத்தின் பிரதி அதிபராகவும் பணி புரிகிறார்.

இருவரும் கொழும்பில் சமுத்திரவியல் சம்பந்தமான இரு நாள் கருத்தரங்கு ஒன்றிலும் கடல் சட்டம் பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றிலும் பங்குபற்றுவர். இலங்கை அரசாங்கக் கடற்றொழில் பயிற்சி நிலையத்தையும் மற்றும் நிலையங்களையும் பார்வையிடுவர்.

# கூட்டணியின் கொள்கை என்ன?

## சந்தேகம் தீர்ந்துள்ளது என்கிறார் வி. பொ.

(யாழ்ப்பாணம்)

''சிறுபான்மை இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் மார்க்ஸிய வாதிகள் ஒத்துழைக்கவேண்டும்''

இவ்வாறு நேற்று முன்தினம் யாழ் வீரசிங்க மண்டபத்தில் தாம் எழுதிய செந்தமிழர் ஆகிடுவோம் என்ற நூலினதும் செங்கையாழியானின் 'யானை' என்னும் நூலினதும் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. வி.பொன்னம்பலம் கூறினார்.

அவர் தொடர்ந்து தமதுரையில், பலருக்கு இன்னும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஒருபெரும் சந்தேகமிருக்கிறது. அதனை உரை கல்லிலே போட்டுப்பார்த்தார்கள். இது யூ என்.பியுடன் தொடர்பு கொண்டுள்ளதா? கம்யூனிஸ் கட்சியுடன் தொடர்புண்டா? இப்படியெல்லாம் சிந்தித்தார்கள் ஆனல் அண்மையில் வர்த்தக வலயம் சம்பந்தமாக கூட்டணி எம் பிக்கள் ஆற்றிய உரை தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கையை உலகறியச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

தெற்கைப் பொறுத்தவரையில் அரசியல் வாதிகள் பல லட்சங்களுக்கு அதிபதியானவர்கள். ஆனல் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் பலரும் ஏழைகளாகவிருக்கிறார்கள்.

லெனின் வகுப்புவாதத்தைப் பற்றிப் பேசுகின்றபோது பெரும்பான்மை இனம் சிறுபான்மையினரை நடாத்துகின்ற ஆக்கிரமிப்பு மிகப் பயங்கரமானது. சிறுபான்மை இனம் தனது விடுதலைக்காகப் போராடுகிறபோது மார்க்ஸிய வாதிகள் சிறிய இன உரிமைகளுக்காகப் பாடுபட வேண்டும் என்றார்.

திரு. குணராஜா (செங்கையாழியான்) கூறியதாவது: வெங்காயத்தின் இறக்குமதி மட்டும் உள்ளூர் உற்பத்தியை பாதிக்கவில்லை. இலக்கியத்திலும் இறக்குமதி இந்தத் தாக்குதலை ஏற்படுத்தியுள்ளது

கடந்த காலங்களில் ஈழத்து இலக்கியங்கள் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தன. தரமான பல இலக்கிய ஆக்கங்கள் உருவாகின அவற்றைப் படிப்பதற்கென்றே ஒரு வாசர் வட்டம் உருவாகியது. இவ்வாறு ஈழத்து இலக்கியத்தில் ஓர் எழுச்சி ஏற்படுகின்ற காலகட்டத்தில் தான் தற்போது வெளிநாடுகளில் இருந்து பல இலக்கியங்களை இறக்குமதி செய்வதால் ஈழத்து எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. [கா]

ஏழாலை மேற்கு கோஷ்டிச்சண்டை

# சந்தேக நபர்கள் 21வரை றிமாண்ட்

(மாவிட்டபுரம்)

காணித் தகராறின் எதிரொலியாக ஏழாலை மேற்கில் இடம்பெற்ற கோஷ்டிச் சண்டை குறித்து கைதான இரு நபர்களும் சரண் புகுந்த ஒருவரும் பெப்ரவரி மாதம் 21ந் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டனர்

கடந்த 18ந் திகதி ஏழாலை மேற்கில் காணித்தகராறு காரணமாக இரு கோஷ்டியினருக்கிடையில் இடம் பெற்ற சண்டையில் கத்திவெட்டு. பொல்லடி, கல்லெறி என்பன இடம்பெற்று அவ்விடத்தைச் சேர்ந்த நரசிங்கம் சரவணமுத்து என்பவர் கொலையுண்டதும் மேலும் பலர் பலத்த காயமடைந்ததும் தெரிந்ததே.

இச்சம்பவம் தொடர்பாக (6-ம் பக்கம் பார்க்க)

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 10918

வைத்திலிங்கம் நவரத்தினம் கோவில் வீதி நல்லூர் யாழ்ப்பாணம். வழக்காளி

எதிராக

தம்பு சபாபதிப்பிள்ளை மீசாலை தெற்கு யாழ்ப்பாணம் எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M B. /10918-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி, 1978ம் வருடம் மாசி மாதம் 2-ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10-45 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை**

முதல் வட்டி ரூபாய் 3400/-ம் 25-6-69 தொடக்கம் 1-1-70 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 12 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும், இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 319-90 சதம்.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று மீசாலை இறை 'உப்புக்குளி வயல்' நெற்பரப்பு இலாச்சம் 70 இதில் மேற்குப்பக்கத்தில் நிந்தமாக உள்ள காணி நெற்பரப்பு 35 இந்த நெற்பரப்பு 35-க்கும் எல்லை கிழக்கு தம்பு சபாபதிக்குரிய எஞ்சிய பகுதி வடக்கு கனகசபை சோமசுந்தரத்துக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம் தெற்கு தண்ணீர்க் கால்வாயும், கதிர்காமர் மயில்வாகனத்துக்குரிய ஆதனம் மேற்கு விஜசித்தம்பி கதிர்காமரினதும் பங்காளரினதும் ஆதனம், எவ் 355/220 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சி. சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனையாளரும்
மதிப்பாளரும்

தொல்புரம்
25-11-77 8838

# வெற்றிடம்

## பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவுச் சங்கம்
சித்தன்கேணி

### பொது முகாமையாளர் தரம் III

மேற்படி பதவிக்கு, கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 08-02-'78ம் திகதிக்கு முன், கீழ்க் கையொப்பம் இடுபவரின் பதவிப் பெயருக்குப் பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவுச் சங்கம், சித்தன்கேணி என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல்வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பொது முகாமையாளர் தரம் III'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

சம்பளம்: 340/- — 590/- .................... 15X10, 20X5. [விசேட படி 90/-ம் 50/-ம் வழங்கப்படும்]

வயதெல்லை: விண்ணப்ப முடிவுத் திகதியன்று 25 வயதிற்குக் குறையாதவராயும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல்வேண்டும்.

விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்கு மேல் வசித்துவருபவராக இருத்தல்வேண்டும். சங்கத் தொழிற்பரப்பெல்லைக்குள் வசிக்கும் விண்ணப்பதாரிகட்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

கல்வித் தகைமை:
1. கூட்டுறவுப் பயிற்சி பெற்ற பட்டதாரி அல்லது,
2. 3 வருட கால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர் தராதரப் பத்திரம் அல்லது,
3. 5 வருட கால அனுபவம் பொருந்திய முன்னுள் கூட்டுறவுப் பரிசோதகர் அல்லது,
4. ரூ. 20,00,000/- ஐ வருடாந்த மொத்த விற்பனவாகக் கொண்ட வியாபார ஸ்தாபனம் ஒன்றில் மேல் முகாமைப் பதவியொன்றில் 3 வருடகால அனுபவமுடைய ஒருவர்.

மேலதிக விபரங்கட்கு இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானி இல. 15,009/12 ஏ. திகதி 12-05-72 ஐப் பார்க்கவும்.

விண்ணப்பங்கள் பூரண விபரங்களுடன் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

சித்தன்கேணி,
24-01-'78.

தலைவர் (மு: தம்பிஐயா),
ப. மீ. கூ. சங்கம்.

8348

# ஈழநாடு
The Eelanaadu

## உப வானொலி நிலையங்கள்

ஒலிபரப்புச் சேவையை மேலும் பரவலாக்கும் பொருட்டு நாட்டில் மேலும் பல ஒலிபரப்பு நிலையங்களை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறதென்று தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. டி. பி. விஜதுங்க தெரிவித்திருக்கிறார்.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர் கிராமங்களுக்குச் சென்று நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்வதனால் மறைந்திருந்த திறமைகளை வெளிக்கொணரக்கூடியதாக உள்ளதென்றும் அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

'கீதமஞ்சரி' என்ற புதிய நிகழ்ச்சியொன்றுக்கான ஒலிப்பதிவு கண்டி புஷ்பதானபாலிக வித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவத்திலேயே அமைச்சர் மேற்கண்ட தகவல்களை வெயிட்டார்.

நாட்டின் பல பகுதிகளிலும் ஒலிபரப்பு நிலையங்களை அமைப்பது நிகழ்ச்சிகளை மக்கள் தெளிவாகக் கேட்பதற்கு பெரிதும் உதவுமென்பது உண்மையே.

கொழும்பு வானொலி நிகழ்ச்சிகளை யாழ்ப்பாணப் பகுதியிலுள்ளவர்கள் துப்பரவாகக் கேட்கமுடியாத நிலை இருந்தது. இதுபற்றிப் பலரும் பல இடங்களிலும் குரல் எழுப்பினர் வானொலி விசாரணைக் கமிஷன்களிடமும் இந்தக்குறைபாடு பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டது.

பகீரதப் பிரயத்தனத்தின் விளைவாக மண்டைதீவில் ஒரு ஒலிபரப்பு நிலையம் அமைக்கப்பட்டது.

இந்த நிலையம் அமைக்கப்பட்டபின் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணப் பகுதியில் மிகத் தெளிவாகக்கேட்கக்கூடியதாக இருக்கிறது.

மண்டைதீவு நிலையம் அமைக்கப்பட்டதும் வட பகுதி மக்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்தனர்.

ஆனால் உப வானொலி நிலையம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவேண்டுமென்ற கோரிக்கை இந்த நிலையத்தின்மூலம் நிறைவேறவில்லையே என்பதும் அமைக்கப்பட்ட ஒலிபரப்பு நிலையம்கூட எதிர்பார்த்ததற்கு மாறாகப்பயன்படுகிறதே என்பதும் இப்பகுதி மக்களின் பெரும் குறையாக இருக்கிறது.

மக்களின் சிந்தனையைத் தூண்டக்கூடிய நல்லநிகழ்ச்சிகளைக் கேட்பதற்குப் பதிலாக நாள் முழுவதும் பல பெயர்களில் சினிமாப் பாடல்களையே கேட்டுத் தொலைக்கவேண்டிய நிர்ப்பந்தம் வடபகுதி மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் சிங்கள சேவை ஒன்றின்புதியநிகழ்ச்சிக்காக கண்டியில் நடந்த இரு ஒலிப்பதிவு நிகழ்ச்சியில் பேசுகையிலேயே தகவல் ஒலிபரப்பு அமைச்சர் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மறைந்து கிடக்கும் திறமையைத் தேடிக்கிராமங்களுக்குச் செல்வதால் பல புதிய கலைஞர்களைக் கண்டுபிடிக்கக்கூடியதாயிருக்கிறது என்று கூறியிருக்கிறார்.

இந்தநிலை தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் இன்னும் ஏற்படவில்லையே!

கேட்டுக்கேட்டுப் புளித்துப் போன குரல்களையே தமிழ்ச்சேவையில் கேட்கலாம்.

யாழ்ப்பாணத்தில் ஒரு உபவானொலி நிலையம் அமைக்கப்படவேண்டுமென்று கோரியபோது இந்த உபவானொலி நிலையத்திலேயே நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்யக்கூடிய வசதிகளும் இருக்கவேண்டுமென்று ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள கலைஞர்கள் கொழும்புக்குச்சென்று நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதிலுள்ள கஷ்ட நஷ்டங்களை இதன் மூலம் தவிர்க்கலாமென்பதுடன் மறைந்துகிடக்கும் திறமைகளையும் வெளிக்கொண்டுவரமுடியுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அமையும் உபவானொலி நிலையம் இத்தேவைகளைப் பூர்த்திசெய்யுமென்றே எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் யாழ்ப்பாணப் பகுதி மக்களுக்குக் கிடைத்தது ஏமாற்றமே.

இனியாவது மண்டைதீவு உபவானொலி நிலையத்தைச் சரியான முறையில் பயனுள்ள முறையில் பயன்படுத்துவதற்கான முயற்சிகளை தகவல் ஒலிபரப்பு அமைச்சுமேற்கொள்வதற்கு மக்களும் அவர்களின் பிரதிநிதிகளும் வற்புறுத்துவார்களென எதிர்பார்ப்போம்.

# ஜி. ஜி.யின் ஓராண்டு நினைவுதின ஏற்பாடுகள்

[யாழ்ப்பாணம்]

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் ஓராண்டு நினைவுத் தினத்தையொட்டி, பல்வேறு ஸ்தாபனங்களும் ஏற்பாடு செய்துவரும் நிகழ்ச்சிகளை ஒருமுகப்படுத்தி நடத்துவதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் 29ந் தேதி மாலை 4 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

சட்டத்தரணி தா. சங்கரப்பிள்ளை இந்த ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டவுள்ளார்.

திருமதி அந்தோனியா சுவாமிநாதர் தலைமையிலான அமரர் ஜி. ஜி. ஞாபகார்த்தக் குழுவினர் யாழ். பொதுசன நூலகத்தின் முன்பாக இம்மாதம் 9ந் தேதி அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் வெங்கலச் சிலைக்கான அடிக்கல்லை நாட்டுவதற்கான ஏற்பாட்டைச் செய்துவருகின்றனர்

நாட்டின் பிரதமராகப் பதவி ஏற்கவிருக்கும் அமைச்சர் திரு. பிரேமதாசாவைக் கொண்டு இந்த அடிக்கல்லை நாட்டத் தீர்மானித்து, இதற்கான அழைப்பை விடுத்துள்ளனர்.

அடிக்கல் நாட்டுவிழாவைத் தொடர்ந்து, யாழ். முற்றவெளி மைதானத்தில் அஞ்சலிக் கூட்டமொன்றை நடத்துவதற்கும் முடிவுசெய்துள்ளனர். இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அமைச்சர்களுக்கும் மற்றும் சகல அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு அனுப்புவதென்றும் முடிவுசெய்துள்ளனர்.

இதேசமயம், தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸ், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பெப்ரவரி 9ந் தேதி அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அஞ்சலிக் கூட்டமொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவுடன் நல்லூர் கல்யாண மண்டபத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் அஞ்சலிக் கூட்டமொன்றை நடத்தவும், மலர் ஒன்றை வெளியிடவும் நல்லூர் தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்கள் முடிவுசெய்துள்ளனர்.

குருநகரில், அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் இரண்டு உருவச் சிலைகளை, பெப்ரவரி 9ந் தேதி திறந்துவைக்கத் தனித்தனியாக இரு குழுவினர் ஒழுங்குசெய்து வருகின்றனர். சிலை நிறுவுவதற்கான இடத்திற்கு அங்கீகாரம் வழங்குமாறு உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவிடம் கோரியுள்ளனர்.

பருத்தித்துறையில் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அஞ்சலிக் கூட்டத்தை பெப்ரவரி 9ந் தேதி நடத்தவும் காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

சாவகச்சேரியிலும் அஞ்சலிக் கூட்டமொன்றை நடாத்த ஏற்பாடு செய்யப்படுவதாகத் தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸ் உப தலைவர் திரு. வி. குமாரசாமி நேற்றுத் தெரிவித்தார்.

### இன்று கூடுகிறது

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் நினைவு தினம் தொடர்பான ஏற்பாடுகள் பற்றி இறுதி முடிவு செய்வதற்கு வண்ணார்பண்ணையில் ஜி. ஜி. ஞாபகார்த்தக் குழு இன்று மாலை கூடவிருக்கிறது.

வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதியிலுள்ள தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளைக் காரியாலயத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்திற்கு தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸ் பிரதிநிதிகளும், காங்கிரஸ் வாலிப முன்னணிப் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டுள்ளனர். [ச]

# 'அமரர் ஹண்டி ஒரு சமுதாயச் சிற்பி'

[மட்டுவில்]

"அமரர் ஹண்டி பேரின்பநாயகத்தின் மாணவர்களைப் பார்த்தாலே, அவர்களின் ஆசிரியரான ஹண்டி எவ்வளவு சிறப்பானவர் என்பது புரியும். அவர் ஆசிரியராகக் கடமையாற்றும்போது, சாதாரண ஒரு ஆசிரியராக இருக்கவில்லை. அவர் ஒரு சமுதாய சிற்பியாக விளங்கினார்!

இவ்வாறு அமரர் ஹண்டி பேரின்பநாயகத்திற்காக, சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் நடத்தபபட்ட அஞ்சலிக் கூட்டத்தில் பேசிய அதிபர் திரு.பூ.வெற்றிவேலு கூறினர். அதிபர் திரு.வெற்றிவேலு தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தைத் தொடர்ந்து ஒரு மணி நேரம், பாடசாலை முன்னதாகவே மூடப்பட்டது.

"அமரர் ஹண்டி பேரின்பநாயகம் ஒரு சிறந்த கல்விமான் மட்டுமல்ல, சிறந்த அரசியல்வாதி. சட்டத்துறை நிபுணர், சீர்திருத்தவாதி, சமூக சேவையாளர் எனப் பலதுறைகளிலும் அவர் உயர்ந்தே விளங்கினர் என்று அதிபர் மேலும் கூறினர். ஆசிரியர் உட்பட மாணவர் பலரும் பேசினர். 2நிமிட மௌனப் பிரார்த்தனையும் நடைபெற்றது.

# "உணவைப் போலவே கலை, கலாசாரமும் அவசியம்"

(மட்டுவில்)

"மனித சமுதாயத்திற்கு உணவு உடை எத்தனை முக்கியமோ, அதேபோன்று கலை கலாச்சாரத் துறைகளையும் அவசிய மாகக்கொண்டு அதைப் போற்றிவளர்க்க வேண்டியது எமது தமிழ் சமுதாயத்தின் கடமை. இத்தக் கடமையிலும் தென்மராட்சி, சிறந்து விழங்குவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்".

இவ்வாறு சாவகச்சேரியில் இசைத் தமிழ் நிலையத்தைத் திறந்துவைத்து உரைநிகழ்த்திய, திருமதி இராஜபூபதி அருணாசலம் கூறினர்.

இசையரசு சண்முகரத்தினம் சமயாசாரப்படி இறைவணக்கம்செய்து, மாணவர்களுக்குப் பாடத்தை ஆரம்பித்துவைத்தார். திருமதி இராஜபூபதி அருணாசலம் தொடர்ந்து கூறியதாவது:-

"ஒருவர் உணவு உற்பத்தியில் தமது கடமையை அல்லும் பகலும் திறம்படச் செய்யும் அதே வேளையில் சொல்லேருழவர், இசை வல்லுநர்கள் தமது திறமையால் பல இசைக் கலை மன்றங்களை நிறுவி போட்டியோடு, பொறுமையை விலக்கி, தென்மராட்சியை ஒரு கலைக்கோட்டமாக மாற்ற வேண்டும். இசைக்கலை எமது சமுதாயத்தைப்புனித சமுதாயமாகமாற்றி அமைக்கும் நாம் புனிதர்களாவோம் என்றார்.

## வியட்னம் குற்றச்சாட்டு

ஹனோய், ஜன. 27

கம்போடிய துருப்புக்கள் தங்கள் நாட்டு மக்களையே கொன்று குழப்பம் விளைவித்துவிட்டு வியட்னாமிய படைகளின் மீது. பழியைப்போட முயன்றிருக்கிறார்கள் என்று வியட்னம் குற்றஞ்சாட்டியுள்ளது.

எல்லை நகரங்கள் சிலவற்றில் கம்போடியபடைகளால் கொல்லப்பட்ட கம்போடிய நாட்டவர்களின் சடலங்கள் கிடப்பதாக வியட்னாமியர் கூறினர்'

இதேசமயம் கம்போடியர்களால் சிறைப்பிடித்த வியட்னாமிய படைவீரர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களை கம்போடிய வானொலி ஒலிபரப்பி வருகிறது.

இதுவெறும் கட்டுக்கதையென்றும் கம்போடியரிடம் வியட்னாமியப்படையினர் சரணடையவில்லையென்றும் வியட்னம் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

## மணிவாக்கு

நீதிமானுடைய வழி ராஜபாதைக்குச் சமானம்! சோம்பேறியின் வழியோ முள்வேலி.

— யேசுநாதர்.

வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களின் மறைவுச் செய்தியைக் கேட்டதும் புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளையவர்கள் புரவலர் கனகராசா அவர்களுக்கு ஒரு தந்திச் செய்தியை அனுப்பியிருந்தார்.

ஒரு தமிழ் வித்துவானின் மறைவுகுறித்து புலவர்மணி தமிழில் அனுப்பிய அந்தச் செய்தி இங்குவந்து கிடைத்த கோலத்தை நீங்களும் தெரிந்துகொள்ளவேண்டாமா?

தமிழ் புடவழர்
கனகராசா
மில்க்வைட்
யாழ்.

சா. 10-50 குருக்கல்மடம்
தமிழ்

"தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும் பத்துப்பாட்டு முதலிய இலக்கியங்களையும் எழுத்தாணிபிடித்த சுப்பையாபிள்ளை இறந்துவிட்டார். இந்த நூற்றுண்டில் பிள்ளை அவர்களின் நாவிலே கலைமகள் நடம்புரிந்தது போன்ற ஒரு காட்சியை ஈழத்தில் நான் கண்டதில்லை எனது நண்பரின் குடும்பத்தினருக்கும் தமிழ்பேசும் மக்களுக்கும் எனது மனமாழ்ந்த அனுதாபம். பிள்ளையவர்களின் ஆத்மா சாந்தியடைய—

பெரியதம்பிப்பிள்ளை—

ஃ ஃ ஃ

வேறுசில தமிழ்த் தந்திகள் உருமாறிக் கிடைப்பதுண்டு இது பரவாயில்லை என்கிறார் எனது நண்பர் ஒருவர்!

ஃ ஃ ஃ

கடந்த சில தினங்களாக யாழ்ப்பாணத்தில் திடீரென்று மின்சாரக் கோளாறு ஏற்பட்டுவிடுகிறது.

நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட மின்சாரக் கோளாறினால் 'ஈழநாடு' பத்திரிகையைக் காலையில் காணக்கிடைக்க முடியாத வாசக அன்பர்கள் பலர், தொலைபேசியில் 'ஈழநாடு' வரவில்லையே என்று விசாரித்துக்கொண்டிருந்தனர்.

மின்சாரக் கோளாறுதான் காரணம் என்பதை அவர்களுக்கு நினைவூட்ட வேண்டியிருந்தது.

காலையில் பத்திரிகையை அடித்துமுடிப்போம் என்ற முயற்சிசெய்தபோது காலை பத்துமணிக்கு மீண்டும் மின்சாரம் தடைபப்ட்டது.

கல்வி அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு வந்திருப்பதால் அவர் தங்குமிடம், அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களுக்கு மின்சாரம் தடையின்றிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இரண்டு தினங்களுக்கு முன் முன்னர் மாலையில் திடீரென மின்சாரம் தடைப்பட்டதும் யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் பிரயாணிகள் பட்ட அவலத்தை 'ஈழநாடு' வாசகர்கள் அறிவார்கள்.

மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதால் யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் தினமும் மாலையில் நான்கு அல்லது ஐந்து பெட்ரோமாக்ஸ் லைட்டுகளையாவது பாதுகாப்பாக ஏற்பாடு செய்து வைத்தால் என்ன?

ஒருசில மணிநேரம் இந்த ஏற்பாட்டைச் செய்து வைப்பதால் அதிக நஷ்டம் ஏற்பட்டுவிடாதே!

## மரணத்தில் சந்தேகம்

(பருத்தித்துறை)

புலோலியை சேர்ந்த கே. கிருஷ்ணபிள்ளையின் திடீர் மரணம் தொடர்பாக பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

### ரொடீஷியாவில் பெரும்பான்மை ஆட்சி?

# கறுப்பர் தலைவர்களுடன் அயன்ஸ்மித் உடன்பாடு

## கொரில்லா இயக்கங்கள் எதிர்ப்பு

சாவுஸ்பார், ஜன 27

ரொடீஷியாவில் கறுப்பு இன பெரும்பான்மை மக்களின் ஆட்சிக்கு வழிசெய்யும் உடன்பாடு ஒன்று உருவாகியுள்ளது.

கறுப்பு இனமக்கள் தலைவர்களுக்கும் ரொடீஷிய பிரதமர் அயன்ஸ்மித்துக்குமிடையில் ஏற்பட்டுள்ள இந்த உடன்பாடு பற்றிய விபரம் இன்று அல்லது எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் பகிரங்கமாக அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த உடன்பாட்டின்படி புதிய அரசியல் அமைப்பு ஒன்று உருவாக்கப்படும். இதில் கறுப்பு இனத்தவர்களுக்கு சட்ட மன்றத்தில் 100 பிரதிநிதிகள் இருப்பார்கள், வெள்ளை இனத்தவர்களுக்கு 28 பிரதிநிதிகள் இருப்பார்கள். ஆட்சி முறையில் ஏதும் மாற்றம் செய்யப்படும் போது கறுப்பு இனத்தவர்களான பிரதிநிதிகள் அனைவரும் இணக்கம் தெரிவிப்பதுடன் வெள்ளையர் பிரதிநிதிகளில் 6 பேர் இணக்கம் தெரிவிக்க வேண்டும்.

இதுபற்றிய அதிகாரப் பூர்வமான அறிவித்தல் இன்னும் வெளியாகவில்லை.

இதே சமயம் ரொடீஷிய ஆட்சி மாற்றம் பற்றி உள்நாட்டுத் தலைவர்களுடனேயே உடன்பாடு ஒன்று செய்து கொள்ளப்படுவதை ரொடீஷிய தேசபக்தர்கள் இயக்கம் கண்டித்திருக்கிறது. இவ்வியக்கம் வெளி நாடுகளிலிருந்து இயங்கி வருகின்றது.

இதே சமயம் கொரில்லா யுத்தமும் தொடர்ந்து நடந்து வருகிறது

ரொடீஷியாவிலுள்ள வெள்ளையர்கள் பெரும் எண்ணிக்

[5ம் பக்கம் பார்க்க]

சன்சயின்
அரை பார் சோப்
இன்றே கேட்டு வாங்குங்கள்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

### டுனீஷியாவில் பொதுவேலைநிறுத்தம்

# தெருச் சண்டை, தீவைப்பு,

## பொலிஸ் சூட்டில் பலர் மரணம்

டுனிஸ், ஜன 27

டுனிஷியாவில் நேற்று நடைபெற்ற ஒருநாள் பொது வேலைநிறுத்தம் பெரும் ஆர்ப்பாட்டங்களுடனும், துப்பாக்கிப் பிரயோகம், படுகொலைகளுடனும் முடிவடைந்தது.

அரசாங்கம் தன் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறி

[5ம் பக்கம் பார்க்க]


# எல்லாச் சமயத்திலுமுள்ள எல்லா மனிதருக்கும்

## இரட்சிப்பு! புதுவாழ்வு! குணமடைதல்!



ஸ்ரிவ் கொலொமிஸ்



டொன் ஸ்செல்லன்பேர்க்

கனடா தேசத்தைச் சேர்ந்த
ஸ்ரிவ் கொலொமிஸ்,
டொன் ஸ்செல்லன்பேர்க்
போதகர்களைக் கேளுங்கள்

உலகத்திலுள்ள பெருந்தொகையானோர் இயேசு கிறிஸ்துவின் பேரால் புதுவாழ்வு அடைந்துள்ளனர்.



முடவர் நடக்கின்றனர்

'மருத்துவத்திலும் வைத்தியர்களிலும் எங்களுக்கு நம்பிக்கையுண்டு. ஆனால் உலகத்தில் மிகப்பெரிய வல்லமை கடவுளின் வல்லமையே'



ஆபிரிக்காவில் 30,000 பேர் கேட்கிறார்கள்

அற்புதத்தை எதிர்பாருங்கள்



குருடர் பார்வை அடைகின்றனர்

இடம்: யாழ்ப்பாணம் பொதுமக்கள் நூல்நிலையத்திற்கு அணித்தான திறந்தவெளி அரங்கு.

திகதி: தை மாசம் 22 முதல் 29 வரை.

நேரம்: தினமும் மாலை 6-00 மணிக்கு.

(இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது)

பிரவேசக் கட்டணம் இல்லை

8321

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-45, 10-00
எம். ஜி. ஆர் -ஜெயலலிதா
அரச கட்டளை

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30 9-30,
சரஸ்வதி சபதம்

RIO
Daily 4 Shows
ROD TAYLOR
in
PARTIZAN
விடுதலை விரும்பிய யூகோஸ்லாவிய மக்கள் நாஸிஜெர்மனிக்கு எதிராக நடத்திய ஜீவமரணப் போராட்டம்.

Regal (Jaffna)
தினசரி 2-30, 6-30 இரவு 9-45 மணிக்கும்
ரவிச்சந்திரன் காஞ்சனா நாகேஷ்
நடித்த
உத்தரவின்றி உள்ளே வா
புத்தம் புதிய கொப்பி (கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி-சரோஜாதேவி
நடித்த
பாலும் பழமும்
(புதிய பிரதி)

இன்று முதல் குதூகல ஆரம்பம்
மனோஹரா (யாழ நகர்)
தினசரி 4 காட்சிகள்
நாகேஷ் - ஜெயந்தி
நீர்க்குமிழி
(புதியபிரதி)

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.

நாலாவது வெற்றிவாரம்
ராணி (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
வி. பி. கணேஷன் — சுபாஷினி
ராம்தாஸ் ஜெனிட்டா
நடித்த
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக் காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது 2வது ஜனத்திரள் வாரம்!
சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எம்.ஜி.ஆரின் அரசிளங்குமரி (புத்தம் புதியபிரதி)
... சிறுவர்களுக்கான படக் காட்சி ...
பிரதி சனியும் ஞாயிறும் காலை 8-30 மணிக்கு மட்டும் காண்பிக்கப்படும்.
ஆசனங்கள் அனைவருக்கும் அரைக் கட்டணம்
28-1-78 சனியும் 29-1-78 ஞாயிறும்
காலை 8-30 மணிக்கு
ROBINSON CRUSOE
[சினிமாஸ்கோப்—ஆங்கிலம்]
[பள்ளிக்கூட ஒழுங்குகளுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்]

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
முத்தான முத்தல்லவோ

வெற்றி நடைபோடுகிறது
லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்:நகர்) போன்; 7693
நீதிக்கு தலைவணங்கு

தென்மராட்சி - பச்சிலைப்பள்ளி

# சாரணர் ஆசிரியர் வேலைத் திட்டம்

(மட்டுவில்)

"தென்மராட்சி, பச்சிலைப் பள்ளி சாரண ஆசிரியர்களின் 1978ம் ஆண்டிற்கான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய வேலைத்திட்டத் தினைத் தொடர்ந்து இந்த ஆண்டிற்கான அணித்தலைவர்களின் பாசறைப் பயிற்சியை உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் பெப்ரவரி 3ம் திகதி முதல் 5ம் திகதிவரை நடத்துவது என்றும், சாரணிய இயக்கத் தந்தையான அமரர் பேடன் பவெலின் நினைவுதினத்தை சாவகச்சேரியில் சிறப்பாகக் கொண்டாடுவது என்றும், ஜூன் மாதத்தில் கிளிநொச்சி, தர்மபுரம் மகாவித்தியாலயத்தில் சாரணர் வருடாந்தவிழாவை கொண்டாடுவதென்றும் சாரணஆணையாளரை அழைத்து சாரண ஆசிரியர் மாணவருக்கு பயிற்சி அளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் வட்டார சாரணர் ஆணையாளர் திரு. வி. சி நடராஜா தலைமையில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

## மூதாட்டி கிணற்றுக்கு பலி

[மாவிட்டபுரம்]

கிணற்றுப்பக்கம் சென்ற போது மயக்கம் வந்ததால் வயோதிபமாது ஒருவர் தவறி விழுந்து கிணற்றிற்கு பலியானார்.

ஏழாலை மேற்கைச் சேர்ந்த 70வயதான சிவசிதம்பர லிங்கம் இரத்தினத்தின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

இம் மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. க.பரமநாதன் விசாரணை நடத்தினர். விசாரணையின் பின் மரணவிசாரணை அதிகாரி விபத்து மரணமென தீர்ப்பளித்தார். (௳)

## சமையல் பிந்தியதால் ஏற்பட்ட வினை
### கணவன் நஞ்சுக்குப் பலி

(மாவிட்டபுரம்)

சமையல் பிந்திய காரணத்தால், இளம் கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட தகராறு கணவனது மரணம்வரை போய்நின்றது. நஞ்சருந்தி மரணமான அவரது மரணம், தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

குப்பிளானைச் சேர்ந்த நல்லையா அச்சயபாலன் என்னும் 26 வயது நபரே இவ்வாறு மரணமானவர்.

இவரது மரணம் குறித்துத் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்தியசமயம் காலமானவரின் மனைவி சாட்சியமளிக்கையில், சுருட்டுத் தொழிலாளியான காலமானவர், சம்பவதினம் தொழிலால் வீட்டுக்கு வந்தபோது நிறை வெறியில் காணப்பட்டாரெனவும், வீட்டுக்கு வந்தவர் சமையல் செய்ய ஏன் தாமதமெனக் கேட்டுத் தன்னை அடித்ததாகவும், கைக்குழந்தையுடன் சமையல் செய்யத் தாமதமேற்பட்டு விட்டதெனத் தாம் கூறியும் அவர் தொடர்ந்து தாக்கவே, தாம் கடுமையாக அவரை ஏசியதாகவும், அதையடுத்து ஆத்திரத்துடன் தோட்டத்திற்கு ஓடிய காலமானவர், அங்கிருந்த கிருமிநாசினியை எடுத்துக் குடித்ததாகவும், தாம் உடனே மருந்தைத் தட்டிவிட்டு, அவரைத் தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்று சிகிச்சை அளித்தபோது மரணமானதாகவும் தெரிவித்தார்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அதிகாரி திரு. சூரியபாலன் பிரேத பரிசோதனைசெய்து சாட்சியமளிக்கையில், நஞ்சருந்தியதால் ஏற்பட்ட மரணமெனத் தெரிவித்தார்.

தற்கொலையெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. சுன்னாகம் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

## பருத்தித்துறை வெற்றி

[நெல்லியடி]

இ. போ. ச. வடபிராந்திய விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 25-1 78ல் பருத்தித்துறை டிப்போ ஊழியர்கள் 3-1 என வெற்றியீட்டினர். மத்தியஸ்தராக ஏ. அமிர்தநாதன் பணியாற்றினர். பருத்தித்துறை டிப்போ ஊழியரான திரு. என். இராஜரட்னம் அவர்களின் சுறுசுறுப்பு மிக்க ஆட்டம் ரசிகர்களை பெரிதும் கவர்ந்திருந்தது.

## தாயார் ஏசியதால் நஞ்சு குடித்தாராம்
### ஆஸ்பத்திரியில் இருக்கிறா இளைஞர்

(நெல்லியடி)

தாய் கண்டித்ததை விரும்பாத இளைஞர் ஒருவர் நச்சுத் திராவகத்தை அருந்தியதாகக் கூறப்படுகிறது. இவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இப்பொழுது அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார்.

உடுப்பிட்டி சந்தை வீதியை சேர்ந்த ஆனந்தன் சந்திரமோகன் என்றும் 24 வயதுடைய வாலிபரே இவ்வாறு நச்சுத் திராவகம் அருந்தி சிகிச்சைபெற்று வருவராவார்.

இவர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. பாருக்காதருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்ததாவது:- சம்பவதினம் தாயார் எனக்கு உணவு பரிமாறினார். உணவு சுவையானதாக இருக்கவில்லை. இதனால் எனக்கு மிகவும் கவலையும் ஆத்திரமும் வந்தது. இதனால் எனது தாயாரை ஏசினேன். அவரும் என்னைத் திருப்பி ஏசினார். தாயை ஏசிய கவலையால்தான் நான் நச்சுத்திராவகத்தைஅருந்தினேன் என்றார்.

பருத்தித்துறை பொலிசார் இது சம்பந்தமான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்.

## றொடீஷியாவில்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கையில் நாட்டை விட்டு வெளியேறி வருகிறார்கள் றொடீஷியா தன்னிச்சையாக சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்டதின்பின்னர் 1971-ம் ஆண்டுக்குப்பின் எப்போதையும்விட கடந்த ஆண்டில் ஏராளமான வெள்ளையர்கள் வெளியேறியுள்ளார்கள். கடந்த ஆண்டில் மாத்திரம் 16 ஆயிரம் வெள்ளையர்கள் வெளியேறியிருக்கிறார்கள்.

## டுனீஷியாவில்

[4ம் பக்கத் தொடர்ச்சி]

விட்டதுஎன்றகுற்றச்சாட்டை முன்வைத்து டுனிஷிய பொது தொழிலாளர்கள் யூனியன் இந்த வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இவ்வேலை நிறுத்தம் சட்ட விரோதமாக நடத்தப்படுவதாகக் கூறி அத்தியாவசிய சேவைகளை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததைத் தொடர்ந்து தெருச் சண்டைகளும் தீவைப்புகளும் இடம் பெற்றன.

பொலிஸாரும், ராணுவத்தினரும் குழப்பம் விளைவித்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் ஏராளமானவர்கள் காயமுற்றனர். சிலர் கொலையுண்டதாகவும் அறிவிக்கப்பட்டது

பஸ்கள் தீவைத்துக் கொழுத்தப்பட்டன. அரசாங்கக் கட்டிடங்கள் உடைக்கப்பட்டன. அரசாங்க வங்கியொன் கொளுத்தப்பட்டது.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 2-30, 6-30, 9-30
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
கல்யாணமாம் கல்யாணம்

உதைபந்தாட்டம்

## மட்டுநகரும் யாழ்நகரும் நாளை மோதுகின்றன

(யாழ்ப்பாணம்)

மட்டுநகர் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டியும், யாழ் நகர் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டியும் நாளை பிற்பகல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் மோதுகின்றன.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஆதரவில் மாவட்டத் தெரிவுக் கோஷ்டிகளிடையே வருடாந்தம் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் முதல் சுற்று ஆட்டமே நாளை நடைபெறவுள்ளது. மேற்படி இரு கோஷ்டிகளுக்கு மிடையிலான 2வது சுற்று ஆட்டம் அடுத்த மாதம் மட்டுநகரில் நடைபெறும்.

நாளை நடைபெறவிருக்கும் இந்த ரசிப்பான மோதலுக்கு யாழ்ப்பாணப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. ரண்முத்துகல

(6-ம் பக்கம் பார்க்க)

சன்சயின்
அரைபார்சோப்
இன்றே
கேட்டு வாங்குங்கள்
லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி.

# கரையூர் 'மணி' துப்பாக்கிக்கு பலி!

[யாழ்ப்பாணம்]

கரையூர்மணி என்று அழைக்கப்படும் நிக்கலஸ் அமலதாசா என்ற 25 வயது இளைஞர் நேற்று பிற்பகல் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானர்.

நண்பர் ஒருவருடன் வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது கரையூர் அரசாங்க சேமக்காலைக்கு அருகில் இச் சம்பவம நடைபெற்றது.

ரோட்டுக்கு அருகில் வெட்டுக்காயங்களுடன் முகம் குப்புற விழுந்துகிடந்தநிலையில் அவரது சடலம் காணப்பட்டது.

நேற்றுப் பகல் 2 மணியளவில் தமது நண்பர்கள் நால்வருடன் சேர்ந்து மதுஅருந்திவிட்டு அன்ரன் என்ற நண்பர் ஒருவருடன் சைக்கிளில் இவர் வந்துகொண்டிருந்தபோதே இச்சம்பவம் நடைபெற்றதாம்.

சைக்கிளில் வந்துகொண்டிருந்தபோது இவரை வழிமறித்த மூவர் வாளால் வெட்டி வீழ்த்திவிட்டு குழல் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்துள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## கொலைக்குற்றச்சாட்டு

கொலைக்குற்றச்சாட்டுஒன்று உட்பட இவர்மீது 25க்கு மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்று பொலிசார் தெரிவித்தனர்.

மூன்று மாதங்களுக்கு முன்னரும் ஒருமுறை வாள்வெட்டுக்கு இலக்கான கரையூர் மணி தமது கைவிரல் ஒன்றை இழந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது இனந்தெரியாத நபர்கள் இவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ய முயன்று தோல்விகண்டதும் தெரிந்ததே.

இச்சம்பவம் தொடர்பாக தர்மன், துரைராஜா ஆகியோருடன் இன்னும் இருவரையும் பொலிசார் தேடிவருகின்றனர்.

குருநகர் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி திரு. எச். எம். ஜி. ஹேவா தலைமையில் விசாரணைகள் நடைபெறுகின்றன [கூ. இ]

## இருமுறை வெட்டிய பின் துப்பாக்கிச் சூடு

கரையூர் மணி பீச் ரோட்டால் வந்துகொண்டிருந்தபோது, பின்னுல் துப்பாக்கிச் சூட்டுச்சத்தம் கேட்டதாகவும் அதைத் தொடர்ந்து மூவர் மணியை நோக்கி ஓடிவந்தபோது, 'என்னடா' என்று மணி அவர்களைக் கேட்டதும் அவர்களில் ஒருவரான துரைராஜா என்பவர், மணியை கத்தியால் வெட்டி கீழே விழுத்தியதாகவும் நேற்று நடைபெற்ற ஸ்தல விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மணி கீழே விழுந்ததும் துரைராஜா என்பவர் மீண்டும் அவரை வெட்டியதாகவும் அடுத்து தர்மன் என்பவர் பொக்கட்டிலிருந்து தோட்டாவை எடுத்து துப்பாக்கியில் போட்டுசுட்டாராம்.

ஸ்தலவிசாரணை நடத்திய பதில் நீதவான் திரு. எஸ். அமிர்தலிங்கம் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு மேலும் விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்குவதை இன்றுவரை ஒத்திவைத்தார். [இ]

## புதிய சட்டத்தரணிக்கு இன்று வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரனுக்கு இன்று மாலை பொது மக்களால் புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ கமலாம்பிகை வித்தியாலய முன்றலில் மகத்தான வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

எதிர்க்கட்சி தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த வரவேற்பு விழாவை பண்டிதர் க. பொ. இரத்தினம் ஆரம்பித்து வைப்பார்.

சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில் வடிவேல், விரிவுரையாளர் ந. பேரின்பநாதன், மற்றும் கூட்டணி எம். பிக்கள் தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்கள், மகளிர் பேரவையினர் பாராட்டுரை வழங்குவார்கள்.

கவியரங்கு, கலைநிகழ்ச்சிகள் மேளவாத்திய இசை நாடகம் இடம்பெறும் மலர் ஒன்று வெளியிடப்படும்.

இவ்விழாவையொட்டி எதிர்க்கட்சித் தலைவர் திரு ஏ. அமிர்தலிங்கம் அனுப்பியுள்ள ஆசிச் செய்தியில் 'தமிழ் இனத்தின் வாழ்வில் இன்னல் மிகுந்த இந்த நேரத்தில் இளஞ் சந்ததியை இட்டுச்செல்ல பல தலைவர்கள் தேவைப்படுவதாகவும், தலைமை தாங்குவதற்கு ஏற்ற அறிவும் ஆற்றலும் ஆளுமைபும் ஒருங்கே பெற்ற இளம் தலைவராக தம்பி மகேந்திரனை காண்கிறேன் என்று தெரிவித்துள்ளார். [க

## மட்டுநகரும்

[5ம் பக்கத் தொடர்ச்சி]

பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

கடந்த வருடம் நடைபெற்ற இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ். தெரிவுக்கோஷ்டி முதன் முறையாகக் கலந்துகொண்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் காரியதரிசி திரு. அ தேவராசா செய்துள்ளார்.

## அராலியில் இன்று

[யாழ்ப்பாணம்]

அராலி முத்துமாரி அம்மன் கோவில் தை மாத வெள்ளி இன்று நடைபெறுகிறது. அன்னதானமும் இடம்பெறும்.

## ஏழாலை...

[1-ம் தொடர்ச்சி]

விசாரணையிலீடுபட்ட சுன்னுகம் பொலிசார், அவ்விடத்தைச் சேர்ந்த ராசதுரை சச்சிதானந்தம், பஞ்சலிங்கம் ரவீந்திரராசா ஆகியோரைச் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்தனர். அத்துடன் அதேயிடத்தைச் சேர்ந்த பஞ்சலிங்கம் செல்வராசா என்பவர் மல்லாகம் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் மூலம் சரண்புகுந்தார்.

இம்மூவரும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது பெப்ரவரி மாதம் 21ந் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி திரு. டி. யேசுரத்தினம் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் குறித்துச் சுன்னுகம் பொலிசார் மேலும் பலரைத் தேடிவருகிறார்கள்.

## பொத்துவில்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சையளிக்கப்பட்டது,

சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டதும் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, அமைச்சர்கள் ஆர். பிரேமதாசா, கே. டபிள்யூ. தேவநாயகம், காமினி ஜெயசூரியா, எம். எச். முகமத் ஆகியோர் ஆஸ்பத்திரிக்குச் சென்று பார்வையிட்டனர்.

### பிரதமர் ஆறுதல்

"நான் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, எவருக்குமே அநியாயம் செய்யவில்லை; என்னை உகந்தை முருகன் காப்பாற்றுவார்'' என்று திரு. கனகரத்தினம் பிரதமரிடம் கூறியபோது, அவருக்குப் பிரதமர் ஆறுதல் கூறினர்.

### இராசதுரையும் அங்கிருந்தார்

சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர் மட்டக்களப்பு முதல்வர் திரு. செ. இராசதுரையும், உகந்தை முருகன் ஆலயத் தர்மகர்த்தாக்களும் திரு. கனகரத்தினத்துடன் உரையாடிக் கொண்டிருந்தனர்.

பொலிஸார் உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த இளைஞர்களைத் தேடிப் பொலிஸார் நாடு முழுவதிலும் வலைவிரித்துள்ளனர். [ம-இ]

## மலைகளுடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால், அதிபர்களும், ஆசிரியர்களும் மாலைகளுடன் பலாலிக்கு சென்றிருந்தனர்.

அமைச்சர் விசேட ரயிலில் வருவார் என்பது கடைசி நேரம்வரை ரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. இந்த ரகசியம், அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தெரியாமல் போய்விட்டது. (க)

## கலங்கரை—

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

விகாரைக்குச் சென்று வழிபாடு செய்தார். அதன் பின் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று விசேட வழிபாட்டில் கலந்துகொண்டார். நல்லூர்க் கந்தசுவாமிகோயில் வழிபாட்டில், திரு. டி. எம். சுவாமிநாதனிடமிருந்து அமைச்சர் காளாஞ்சியைப் பெற்றுக்கொண்டார்.

நாவலர் மண்டபத்திற்குக் கல்வியமைச்சர் சென்றபோது நாவலர் பரிபாலனசபைத் தலைவர் திரு. ரி. முருகேசம்பிள்ளை வரவேற்றார். கல்வியமைச்சர் தென்னிந்திய வரலாறு, வியத்தகு இந்தியா, முன்னைச் சிங்கள ஓவியம், இலங்கைத்தூபி ஆகிய தமிழ் நூல்களைத் திரு. முருகேசம்பிள்ளையிடம் கையளித்தார்.

முத்திரைச்சந்தை சென் ஜேம்ஸ்தேவாலயத்திற்கும் அமைச்சர் சென்று வழிபாடு செய்தார். [கா]

## வட்டு. வளாக மாணவன் நஞ்சருந்தி தற்கொலை

(சங்கானை)

மனவிரக்தியடைந்த வட்டுக்கோட்டை வளாக மாணவன் ஒருவன் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலைசெய்து கொண்ட சம்பவம் பொன்னாலை சுடலையில் இடம்பெற்றுள்ளது.

உடுப்பிட்டியைச் சேர்ந்தவரும் யாழ் வளாக வைத்தியப் பிரிவு மாணவனுமான வேலாயுதபிள்ளை சிவராசசிங்கம் [வயது 27] என்பவரே இந்த நபராவார்.

சங்கானையில் உள்ள வீடு ஒன்றிலிருந்து கல்வி பயின்று வருபவரான சிவராசசிங்கம் கடந்த இரண்டு மூன்றுதினங்கள் மனவிரக்தியடைந்த நிலையில் இருந்தாரென்றும் சம்பவதினம் தனது விடுதியில் கடிதம் ஒன்றை எழுதி தனது கைக்கடிகாரத்தையும் அத்துடன் வைத்துவிட்டு தனது மாணவ நண்பர்களிடம் தான் வீடு சென்று மறுநாள் வருவதாக பிரியாவிடைபெற்றுக் கொண்டு தனது சயிக்கிளில் பொன்னாலை சுடலைக்குச் சென்று நச்சுத்திராவகம் அருந்தினாரென்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது,

இவர் எழுதிய கடிதத்தில் "எனது மனச்சஞ்சலத்தால் இச் செயல்புரிகிறேன்'' எனவும் எழுதியிருந்தாராம். இவர் இறந்த இடத்தில் அவருடையதெனக் கருதப்படும் சயிக்கிளையும் நச்சுத்திராவகப் போத்தலையும் பொலிசார் கண்டெடுத்துள்ளனர். ஸ்தலத்தில் நிகழ்ந்த விசாரணையில் சங்கானை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி திருச்செல்வம் பிரேதபரிசோதனை நடாத்தினர்.

மானிப்பாய் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு கே. சேனுதிராசா முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கினர். (க)

## கூட்டுறவுச்சங்க கிளையில் திருட்டு

[சங்கானை]

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தின் கீழ் இயங்கிவரும் நெல்லியான் கிளை கடந்த புதன்கிழமை இரவு உடைக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளதாக சங்கானை பொலிசில் கிளை முகாமையாளரால் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## காணவில்லை

வல்வெட்டித்துறையிலிருந்து நேற்று மாலை 3-45 மணியளவில் புறப்பட்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மோட்டார் வானிலிருந்து ரூபா 400/- பெறும்தியான மாச்சாக்குகள் வல்வெட்டித்துறைக்கும் தொண்டமானாற்றுக்குமிடையே காணுமல் போய்விட்டது. இதுபற்றிய தகவல் தெரிந்தவர்கள் எம். தங்கவேல், 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்றமுகவரியில் தயவுசெய்து தெரிவிக்கவும். 8349

## மரண அறிவித்தல்

### செல்லப்பா இராஜதுரை

சங்கரத்தை, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இளைப்பாறிய P. W. D. ஓவசியர் செல்லப்பா இராஜதுரை காலமானர். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஸ்ரீகாந்தா [U K.], ஸ்ரீஸ்கந்தராசா [P. W D. இரததோட்டை], செந்திமலர், செந்திச்செல்வம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சபாரத்தினம் [U. K.] குகனேஸ்வரி, குணரத்தினம் [பட்டினசபை, வல்வெட்டித்துறை], மகேஸ்வரன் [உபதபாலதிபர், திக்கதலபொத்த] ஆகியோரின் மாமனுருமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று [28-1-78] சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 3851





## தேவை

வாகை, மஞ்சவுன்ன, நாவல் மரங்கள் எமது தொழிற்சாலைக்குத் தேவைப்படுகின்றன. இவற்றை வைத்திருப்போர் எம்முடன் உடன் தொடர்பு கொள்ளவும்

வர்த்தக முகாமையாளர்
சீ-நோர்,
குருநகர்.
8329

## தேவை

ஆங்கிலத்தில் கணக்கு எழுத அனுபவம் வாய்ந்த 30 வயதிற்கு மேற்படாத விற்பனையாளர் (Salesman) பதவிக்கு ஆள் தேவை. 31-1-78க்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும். முருகன் எலக்றிக்கல் ஸ்ரோர்ஸ், 6/8, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

8348


இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெள்ளோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.